# 5வது சிறுவழக்குகள் நீதிமன்றம்

## ( மோட்டார் வாகன விபத்து வழக்குகள் தீர்ப்பாயம், சென்னை)

## MCOP No. 917/2025

| | |
|---|---|
| **சாட்சியின் வரிசை எண்** | மசா1 |
| **பெயர்** | சரஸ்வதி |
| **க/த.பெயர்** | மோகன் |
| **வயது** | 52 |
| **விலாசம்** | திருத்தணி, திருவள்ளுர் |
| **தொழில்** | ... |

சாட்சி அமர்வு எழுத்தரால் உறுதி மொழி சட்டம் 1969 ன் பிரிவு 6ன் படி சத்திய பிராமணம் செய்விக்கப்பட்டு அதன் படி அவரது சாட்சியம் இன்று 07.08.2026 ல் பதிவு செய்யப்பட்டது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த விபத்து நடக்கும் என் கணவர் TVS XL வாகனத்தை ஓட்டி சென்றார் என்றால் ஆம். அந்த வாகனத்திற்கு காப்பீடு இருந்ததா என்றால் இல்லை. எண் கணவருக்கு ஓட்டுநா் உரிமம் உள்ளதா என்றால் உள்ளது. ஆனால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. விபத்து குறித்து காவல் நிலையத்தில் முதலில் புகார் நான் தான் கொடுத்தேன் என்றால் ஆம். முதல் தகவல் அறிக்கையில் என் கணவர் தலைக்கவசம் அணிந்து சென்றார் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் அதில் குறிப்பிடவில்லை. ஆனால் தலைக்கவசம் அணிந்திருந்தார். TVS XL வாகனத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. விபத்து குறித்த மாதிரி வரைபடம் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆம். என் கணவரின் தொழில் மற்றும் வருமானத்தை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. இந்த விபத்து

என் கணவரின் கவனக்குறைவால் தான் நடந்தது என்றாலும் தலைக்கவசம் அணியாமல், ஓட்டுநர் உரிமம் இல்லாமல், காப்பீடும் இல்லாமல் வாகனத்தை ஒட்டி விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. பல்வேறு தலைப்புகளின் கீழ் நான் கேட்டுள்ள இழப்பீடு மிக அதிகம் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

**X**

**X**

சாட்சி தெலுங்கில் சொல்ல சொல்ல தெலுங்கும் தமிழும் தெரிந்த வழக்கறிஞர் சி. ரமேஷ்பாபு MS. 400/1978 கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது,

**<u>5 வது நீதிபதி</u>**
**<u>சென்னை</u>**